TNTP170002682022

Presented on : 13-07-2022
Registered on : 13-07-2022
Decided on : 29-07-2026
Duration : 4 years, 0 months, 16 days

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், இலால்குடி.

**முன்னிலை: எஸ்.பிரகதீஸ்வரன், எம்.ஏ.,பி.எல்.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி, இலால்குடி.

**2026 ம் ஆண்டு ஜுலை மாதம் 29 ம் நாள் செவ்வாய்க்கிழமை**

**அ.வ.எண்.241/2022**

**(CNR No.TNTP000268-2022)**

தெய்வானை அம்மாள் ....வாதி

**// எதிராக//**

1) லோகாம்பாள்
2) சரவணன்
3) பிரபு
4) முருகன் ....பிரதிவாதிகள்

இவ்வழக்கானது கடந்த 13.07.2022–ம் தேதியன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு, 29.07.2026–ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.சத்யா, அவர்கள் முன்னிலையாகியும், 1 முதல் 4 ம் பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.V.ராஜசேகர் அவர்கள் முன்னிலையாகியும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனைக்கு வந்து,

வாதி மற்றும் பிரதிவாதிகள் தரப்பு வாதுரையையும் சான்றாவணங்களையும் பரிசீலனை செய்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்....

**தீர்ப்புரை**

வழக்கு சொத்தை வாதி அனுபவம் செய்து வருவதை பிரதிவாதிகளோ, அவரது ஆட்களோ அல்லது முகவர்களோ வாதியின் சுவாதீனத்திற்கு இடையூறு செய்யக்கூடாது என உத்தரவிட்டு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், வாதிக்கு பிரதிவாதிகள் வழக்குத் தொகைகள் வழங்கக் கோரியும், இவ்வழக்கு தாக்கல் செய்யப்படுகிறது.

**2) வாதி தரப்பு வழக்குரையின் சுருக்கம்:–**

பாச்சூர் கிராம அயன் புஞ்சை சர்வே எண்.129/13 ல் கட்டுப்பட்ட 15 செண்ட் நிலமான தாவா சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டது என்றும், வாதி, 1ம் பிரதிவாதியின் மாமனார் மூக்கன் மற்றும் மாமியார் மாரியாயி, 1ம் பிரதிவாதியின் கணவர் செல்லையா மற்றும் சந்திரா ஆகியோருக்கு எதிராக துறையூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.576/1982 என்ற வழக்கை தாக்கல் செய்ததாகவும், மேற்படி வழக்கில் வாதிக்கு ஆதரவாக 31.12.1991 தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டது என்றும், மேற்படி தீர்ப்பாணையின் அடிப்படையில் இந்நீதிமன்றத்தில் நிறைவேற்று மனு எண்.08/2017 தாக்கல் செய்யப்பட்டது என்றும், மேற்படி நிறைவேற்று மனுவில் வாதிக்கு சாதகமாக உத்தரவாகி, தாவா சொத்தின் சுவாதீனம் நீதிமன்றத்தின் மூலமாக கடந்த 02.06.2018ம் தேதி எடுக்கப்பட்டது என்றும், அ.வ.எண்.576/1982 ல் 1ம் பிரதிவாதியின் கணவர் செல்லையா ஒரு தரப்பினர் என்றும், 2 முதல் 4 வரையிலான

பிரதிவாதிகள் செல்லையாவின் மகன்கள் என்றும், எனவே, மேற்படி செல்லையாவிற்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணை இவ்வழக்கு பிரதிவாதிகளையும் கட்டுப்படுத்தும் என்றும், பிரதிவாதிகளுக்கு தாவா சொத்தில் உரிமையோ, பாத்தியமோ இல்லை என்றும், பிரதிவாதிகள் கடந்த 01.04.2022 ம் தேதி வாதியின் அமைதியான அனுபவ சுவாதீனத்திற்கு இடையூறு ஏற்படுத்தியதால் பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3) பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர்வழக்குரையின் சுருக்கம்:–**

பிரதிவாதிகள் தரப்பில் புல எண்.129/13 விற்கான பட்டாவில் செல்லையாவின் பெயர் கூட்டாக இருந்து வருகிறது என்றும், கணினி வழி பட்டாவை 09.07.2022 ம் தேதி தான் வாதி பெற்று இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும், அ.வ.எண்.576/1982 வழக்கின் 3 ம் பிரதிவாதியான செல்லையா கடந்த 07.04.2021 ம் தேதி இறந்துவிட்ட நிலையில், 01.04.2022 ம் தேதி பிரதிவாதிகள் வாதியின் அனுபவ சுவாதீனத்திற்கு இடையூறு ஏற்படுத்தியதாக பொய்யான வழக்குமூலத்தை கொண்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும், வாதி தாவா சொத்தின் அனுபவ சுவாதீனத்தில் இல்லை என்றும், வாதி சொத்துக்களுக்கு மேற்கே இருக்கும் பிரதிவாதிகளின் சொத்தை வாதி அபகரிக்க வேண்டும் என்பதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4) இவ்வழக்கின் வழக்குரை மற்றும் எதிர்வழக்குரையை இந்நீதிமன்றம் கவனமாக பரிசீலனை செய்ததின் அடிப்படையில் 17.07.2023 ம் தேதியன்று கீழ்கண்டவாறு எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளன.

**<u>5) எழுவினாக்கள்:—</u>**

1) Whether the plaintiff is in peaceful possession and enjoyment of the suit property?

2) Whether the plaintiff is entitled for the relief of permanent injunction as prayed for?

3) To what other reliefs?

6) வாதி தரப்பில் தெய்வானையம்மாள் வா.சா.1 ஆகவும், ஸ்ரீகாந்த் என்பவர் வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.4 மற்றும் சா.சா.ஆ.1 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் சரவணன் என்பவர் பி.வா.சா.1 ஆகவும், பிரபு என்பவர் பி.வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டு பி.வா.சா.ஆ.1 சான்றாவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**<u>7) வழக்கு சங்கதிகள், சூழ்நிலைகள் மற்றும் தொடர்புடைய வாய்மொழி சாட்சியம் பின்வருமாறு:—</u>**

7.1) தெய்வானையம்மாள் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். மேற்படி வா.சா.1 ன் குறுக்கு விசாரணையிலிருந்து வழக்கிற்கு தொடர்புடைய சங்கதிகள் பின்வருமாறு::

| |
|---|
| எனது இடத்திற்கு 2 அடி கீழ் பள்ளமாக |

| |
|---|
| பிரதிவாதியின் இடம் உள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்து முழு காடாக உள்ளது என்றால் சரிதான், தரிசாக உள்ளது. வா.சா.ஆ.2 ஆவணத்தில் 1ம் பிரதிவாதியின் கணவர் செல்லையா பெயர் வருகிறது என்றால் சரிதான். வழக்கு சொத்தை 2018ம் ஆண்டு சுவாதீனம் எடுக்கப்பட்ட பின்னர் வழக்கு சொத்திற்கு போகவில்லை என்றால் அவ்வப்போது சென்று வருவோம். அங்கு பேருந்து வசதி இல்லாததால் குடியிருக்கவில்லை. வழக்கு சொத்தில் குடியிருந்து வருவதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் ஆவணங்கள் உள்ளது. |

7.2) ஸ்ரீகாந்த் வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். மேற்படி வா.சா.2ன் குறுக்கு விசாரணையிலிருந்து வழக்கிற்கு தொடர்புடைய சங்கதிகள் பின்வருமாறு::

| |
|---|
| கிழக்கில் வாதி கீற்றுக்கொட்டகை அமைத்துள்ளார். சுமார் 5 வருடத்திற்கு முன்பு அமைத்தார். தற்போதும் வாதி வெளிஊரிலிருந்து வருகிறார் என்றால் பஸ் வசதி இல்லாததால் டோல்கேட்டில் இருந்து வருகிறார். |

7.3) சரவணன் பி.வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். மேற்படி பி.வா.சா.1ன் குறுக்கு விசாரணையிலிருந்து வழக்கிற்கு தொடர்புடைய சங்கதிகள் பின்வருமாறு:

| |
|---|
| தாவா சொத்தின் சர்வே எண்.129/13 நாளது தேதிவரை உட்பிரிவு செய்யப்படாமல் இருந்து வருகிறது என்றால் சரிதான். தெய்வானையம்மாள் சுவாதீனம் எடுத்த பின்னர் தாவா சொத்தை அளக்க வந்தார்கள் என்றால் சரிதான். தெய்வானையம்மாள் வேலி போடயிருந்ததை நான் தடுத்துவிட்டேன் என்றால் சரிதான். |

7.4) பிரபு பி.வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். மேற்படி பி.வா.சா.2 ன் குறுக்கு விசாரணையிலிருந்து வழக்கிற்கு தொடர்புடைய சங்கதிகள் பின்வருமாறு:

| |
|---|
| செல்லையா எனது தகப்பனார் ஆவார். மேற்படி செல்லையாவின் தகப்பனார் பெயர் மூக்கன். செல்லையாவின் அம்மாவின் பெயர் மாரியாயி. மேற்படி நிறைவேற்று மனு எண்.8/17 ல் 2018 ம் வருடம் தாவா சொத்தை வாதி தெய்வானையம்மாள் சுவாதீனம் எடுத்தார் என்றால் சரிதான். வா.சா.ஆ–4 ஆவணத்தில் 7 வது சாட்சியான எனது அப்பா செல்லையாவும், 6 வது சாட்சியாக 4 ம் பிரதிவாதி முருகனும் கையொப்பம் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். தாவா இடம் முள்காடாகத்தான் உள்ளது. |

**8) எழுவினா 1, 2 க்கான தீர்வு:–**

8.1) வாதி தரப்பில் பாச்சூர் கிராம புல எண்.129/13 ல் மொத்தமுள்ள 36 செண்ட்டில் 15 செண்ட் நிலமானது வாதிக்கு பாத்தியப்பட்டது என்றும், மேற்படி சொத்தை வாதி நிறைவேற்று மனு எண்.08/17 ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் பேரில் சுவாதீனம் எடுத்து கடந்த 02.06.2018 லிருந்து அனுபவம் செய்து வருவதாகவும், தாவா சொத்திற்கு மேற்கே குடியிருந்து வரும் பிரதிவாதிகள் தாவா சொத்தின் உள்ள வாதியின் அனுபவ சுவாதீனத்திற்கு இடையூறு ஏற்படுத்துவதாகவும், எனவே, மேற்படி பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

8.2) பிரதிவாதிகள் தரப்பில் வழக்குரையில் சொல்லியுள்ள சங்கதிகளை மறுத்துரைத்து தாவா புல எண்.129/13 ற்கான பட்டா எண்.166 கூட்டு பட்டாவாக இருந்து வருகிறது என்றும், மேற்படி பட்டாவில் பிரதிவாதிகளின் தந்தையான செல்லையாவின் பெயரும் உள்ளது என்றும், மேற்படி செல்லையா 07.04.2022 ம் தேதி இறந்துவிட்டதாகவும், அவரது இறப்பிற்கு பின்பு பொய்யான வழக்குமூலத்துடன் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று கட்சிசெய்யப்பட்டுள்ளது.

8.3) இந்நிலையில், வாதி தரப்பில் 21.12.1995 தேதியிட்ட பட்டா பாஸ்புத்தகம், 09.07.2022 தேதியிட்ட கணினி பட்டா, நிறைவேற்று மனு எண்.08/17 ன் உத்தரவு, அமீன் ரிபோர்ட் மற்றும் சுவாதீன அத்தாச்சி ஆகியவை முறையே வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளதும், பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.2 ன் ஆதார் அட்டை பி.வா.சா.ஆ–1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளதும் தெரியவருகிறது.

8.4) மேற்கண்ட சாட்சியசான்றாவணங்களை நன்கு பரிசீலித்ததில், வாதி தெய்வானையம்மாள் இவ்வழக்கின் 1ம் பிரதிவாதியின் கணவரும் 2 முதல் 4 பிரதிவாதியின் தகப்பனாருமான செல்லையாவிற்கு எதிராகவும், மேற்படி செல்லையாவை தந்தை மூக்கன் மற்றும் செல்லையாவின் தாய் மாரியாயி மற்றும் கந்தசாமி மனைவி சந்திரா ஆகியோருக்கு எதிராக தாவா சொத்தான புல எண். 129/13ல் 36 செண்ட்டிற்கு கட்டுப்பட்ட 15 செண்ட் நிலத்தை பொறுத்து துறையூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.576/1982 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்பதும், மேற்படி அ.வ.எண்.576/1982 வழக்கு வாதி தெய்வானையம்மாளுக்கு ஆதரவாக தீர்மானிக்கப்பட்டு, 31.12.1991ல் தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதும், மேற்படி தீர்ப்பாணைக்கு எதிராக தொடரப்பட்ட மேல்முறையீட்டு எண்.121/1992ம் மற்றும் 2ம் மேல்முறையீடு (SA.No.1361/1993) முறையே மாண்புமிகு திருச்சி சார்பு நீதிமன்றத்தாலும், மாண்புமிகு மெட்ராஸ் உயர்நீதிமன்ற மதுரை கிளையாலும், முறையே 30.04.1993 மற்றும் 26.04.2013 தேதிகளில் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதும், அதன்பின்பு வாதி தெய்வானையம்மாள் இந்நீதிமன்றத்தில் தாவா சொத்தின் சுவாதீனத்தை பெற்று தரக்கோரி தாக்கல் செய்த நிறைவேற்று மனு எண். 08/17 தாக்கல் செய்து, மேற்படி மனு அனுமதிக்கப்பட்டு, இந்நீதிமன்றத்தின் மூலமாக தாவா சொத்தின் சுவாதீனம் வாதி தெய்வானையம்மாளிடம் ஒப்படைக்கப்பட்டு, மேற்படி நிறைவேற்று மனு எண்.08/17 26.06.2018ம் தேதி முடித்து வைக்கப்பட்டுள்ளது என்பது வா.சா.ஆ–3 மற்றும் வா.சா.ஆ–4 ஆகிய ஆவணங்களிலிருந்து தெரியவருகிறது.

8.5) மேலும், வா.சா.ஆ.4 ஆவணத்தை நன்கு பரிசீலித்ததில், 1ம் பிரதிவாதியின் கணவரான செல்லையாவும், இவ்வழக்கின் 4ம் பிரதிவாதியான முருகனும், சுவாதீன ஒப்படைப்பு அத்தாச்சியில் முறையே 7 மற்றும் 6 வது சாட்சிகளாக கையொப்பம் செய்துள்ளது தெரியவருகிறது.

8.6) மேற்கண்ட பரிசீலினைகளிலிருந்து, 1வது பிரதிவாதியின் கணவரும், 2 முதல் 4 வரையிலான செல்லையா அ.வ.எண்,576/1982ல் 3ம் பிரதிவாதியாக இருந்துள்ளதும், மேற்படி செல்லையாவிற்கு எதிராக தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டு அதன்அடிப்படையில், நீதிமன்ற உத்தரவின் பேரில் கடந்த 2018ம் ஆண்டு வாதி தெய்வானையம்மாள் தாவா சொத்தின் சுவாதீனத்தை எடுத்துள்ளதும், வாதி தரப்பில் தகுந்த சாட்சியசான்றாவணங்கள் மூலம் நிரூபணம் செய்யப்பட்டிருப்பதாக இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

8.7) மேலும், வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 ஆவணத்தை நன்கு பரிசீலித்ததில், தாவா புல எண்.129/13ல் மொத்தம் 0.24.5 ஏர்ஸ் நிலம் உள்ளது என்பதும், மேற்படி புல எண்.129/13 உட்பிரிவு செய்யப்படாமல் கூட்டு பட்டா (பட்டா எண்.166) ஏற்பட்டுள்ளதும், மேற்படி கூட்டு பட்டாவானது வாதி தெய்வானை பெயரிலும், 1ம் பிரதிவாதியின் கணவர் செல்லையாவின் பெயரிலும், ஏற்பட்டுள்ளது தெளிவாகிறது.

8.8) மேலும், வா.சா.1 மற்றும் பி.வா.சா.1 ஆகியோரின் சாட்சியத்திலிருந்து வாதியின் நிலமான தாவா சொத்து கிழக்கிலும், பிரதிவாதியின் நிலம் மேற்கிலும், இருந்து வருவதும், மேற்படி தாவா சொத்து நீதிமன்றத்தின் மூலம் வாதி தெய்வானையம்மாள் சுவாதீனம்

எடுத்ததும் இருதரப்பிலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட சங்கதிகள் என்பது தெளிவாகிறது.

8.9) மேலும், தரப்பினர்களின் வாய்மொழி சாட்சியத்திலிருந்து, தாவா சொத்தானது தற்போது தரிசாகவும், முள்காடாகவும் உள்ளது என்பதும், வாதி தெய்வானையம்மாள் தாவா சொத்தில் குடியிருந்து வரவில்லை என்பதும், வாதி தெய்வானையம்மாள் நீதிமன்றத்தின் மூலம் சுவாதீனம் எடுத்த பின்னர் வேலி போடவந்தபோது பிரதிவாதிகள் தடுத்துள்ளதும் நன்கு புலனாகிறது.

8.10) மேலும், 1ம் பிரதிவாதியின் கணவரும், 2 முதல் 4 பிரதிவாதிகளின் தகப்பனரான செல்லையாவிற்கு எதிராக தாவா சொத்தை பொறுத்து வாதி தெய்வானையம்மாளுக்கு ஆதரவாக அ.வ.எண்.576/1982ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணை, இவ்வழக்கு பிரதிவாதிகளையும், கட்டுப்படுத்தும் என்பது நன்கு நிலைநிறுத்தப்பட்ட சட்டமாகும். எனவே, தாவா சொத்தில் பிரதிவாதிகளுக்கு உரிமையோ பாத்தியமோ இல்லை என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

8.11) மேலும், தாவா சொத்தானது தரிசாகவும், முள்காடாகவும் இருந்து வருவதால் (Possession follows title for the vacant land) என்ற விதியின் படி, தாவா சொத்தின் உரிமைமூலம் வாதி வசம் இருப்பதால், வாதி தாவா சொத்தில் குடியிருக்கவில்லை என்றாலும், உரிமைமூலத்தின் அடிப்படையில் தாவா சொத்தின் அனுபவ சுவாதீனமானது வாதி வசம் இருந்து வருவதாக இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

8.12) மேலும், வாதி தாவா சொத்தை சுவாதீனம் எடுத்த பின்னர் வேலிபோட இருந்ததை பிரதிவாதிகள் தடுத்ததாக பி.வா.சா.1 சாட்சியம்

அளித்துள்ளதிலிருந்து, தாவா சொத்திலுள்ள வாதியின் அமைதியான அனுபவ சுவாதீனத்திற்கு பிரதிவாதிகள் இடையூறு ஏற்படுத்தியுள்ளார்கள் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

8.13) மேற்கண்ட பரிசீலினைகளிலிருந்து, வாதி தெய்வானையம்மாளுக்கு உரிமைமூலம் உள்ள தாவா சொத்தான புல எண்.129/13 ற்கு கட்டுப்பட்ட 15 செண்ட் நிலத்தில், பிரதிவாதிகளுக்கு உரிமையோ, பாத்தியமோ இல்லை என்பதாலும், மேற்படி தாவா சொத்திலுள்ள வாதியின் அமைதியான அனுபவ சுவாதீனத்திற்கு பிரதிவாதிகள் இடையூறு ஏற்படுத்தி உள்ளதை கருத்தில்கொண்டும், தாவா சொத்தானது வாதியின் அமைதியான அனுபவத்திலும், சுவாதீனத்திலும் இருந்து வருகிறது என்றும், எனவே, பிரதிவாதிகள் தாவா சொத்திலுள்ள வாதியின் அமைதியான அனுபவ சுவாதீனத்திற்கு இடையூறு ஏற்படுத்தக்கூடாதென வாதிக் கோரிய நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதென இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

மேற்கண்ட வகையில் எழுவினா 1, 2 வாதிக்கு ஆதரவாக தீர்மானிக்கப்படுகிறது.

<u>**9) எழுவினா 3 ற்கான தீர்வு:**</u>

1, 2 வரையிலான எழுவினாக்கள் வாதிகளுக்கு ஆதரவாக தீர்மானிக்கப்பட்டுள்ளதால் வாதிக்கு இதர பரிகாரங்கள் கிடைக்கத்தக்கதல்ல என எழுவினா 3 ற்கு தீர்வு காணப்படுகிறது.

**<u>10) இறுதியாக,</u>**

இவ்வழக்கு அனுமதித்து தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இத்தீர்ப்புரையானது இன்று 29.07.2026-ம் தேதியன்று என்னால் சுருக்கெழுத்துத் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்பு என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

PRAGATHEESHWARAN SUBRAMANIAN

Digitally signed by PRAGATHEESHWARAN SUBRAMANIAN

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
இலால்குடி.

**<u>வாதி தரப்பு சாட்சிகள்:-</u>**

வா.சா. 1 - தெய்வானையம்மாள்
வா.சா. 2 - ஸ்ரீகாந்த்

**<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்:-</u>**

| வ.எண். | தேதி | ஆவணங்களின் விவரம் | குறிப்பு |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | 21.12.1995 | பட்டா | அசல் |
| வா.சா.ஆ.2 | 09.07.2022 | கணினி பட்டா | கணினி நகல் |
| வா.சா.ஆ.3 | - | EP.8/17 ன் உத்தரவு | சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.4 | - | அமீன் ரிப்போர்ட் மற்றும் சுவாதீன அத்தாட்சி | சான்றிட்ட நகல் |
| சா.சா.ஆ.1 | - | எனது ஆதார் அட்டை | அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகல் |

**<u>பிரதிவாதி தரப்பு சாட்சிகள்:–</u>**

பி.வா.சா.1 – சரவணன்

பி.வா.சா.2 – பிரபு

**<u>பிரதிவாதி தரப்பு சான்றாவணங்கள்:–</u>**

| வ.எண். | தேதி | ஆவணங்களின் விவரம் | குறிப்பு |
|---|---|---|---|
| பி.வா.சா.ஆ.1 | – | எனது ஆதார் அடையாள அட்டை | அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகல் |

PRAGATHEESHWARAN SUBRAMANIAN

Digitally signed by PRAGATHEESHWARAN SUBRAMANIAN

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

இலால்குடி.